1990 மார்ச் 22]

எலக்ட்ரானிக்ஸ் தொழில் தொடங்குதல்

***5363 திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தமான தொழில் தொடங்கப் படுமா ?

(ஆ) ஆம் எனில் துவக்கப் பணிகள் எப்பொழுது தொடங்கும்?

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் குறிப்பாக எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தமான தொழில் என்றில்லாமல், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், சிறு தொழில் முனைவோர்களுக்குத் தொழில் தொடங்க தொழில் கூடங்கள் அடங்கிய தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக முதல் கட்டமாக 32 ஏக்கர் நிலத்தில் சுமார் ரூ. 50.00 இலட்சம் மதிப்புள்ள திட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் ஒன்றியத்தை உள்ளடக்கிய காக்கலூர் தொழிற்பேட்டைக்காக 228.32 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து நீண்ட ஆண்டு காலமாகவே எந்தவொரு பெரிய தொழிலும் தொடங்காமலேயே இருக்கின்ற காரணத்தால் இப்போது பல்சார் எலக்ட்ரானிக்ஸ் தொழிலுக்காக ஏறத்தாழ 30 ஏக்கருக்கும் மேற்பட்ட இடங்கள் அங்கே ஒதுக்கப்பட்டதாகவும் அரசாங்கம் மூலமாக எனக்குக் குறிப்பு ஒன்று வந்து இருக்கிறது. இருந்தாலும் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட அந்த காக்கலூர் தொழிற்பேட்டையில் ஒரு பெரிய முதலீட்டில் தொழில்—தொழிற்சாலைகளே இல்லாத அந்தப் பகுதியில்—தொடங்க அரசாங்கத்திடம் ஏதாவது செயற் குறிப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் தாலுக்கா, காக்கலூர் அருகே அமைந்துள்ள மின்னணுவியல் தொழிற்பேட்டைக்காக கையகப்படுத்தப்பட்ட 228.32 ஏக்கர் நிலம் தமிழ்நாடு

சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு தொழிற்பேட்டை அமைக்க இப்போது தான் அனுமதி கிடைத்து இருக்கிறது. மேற்படி நிலத்தில் சில ஆக்கிரமிப்புகள் உள்ளதால் பகுதி பகுதியாக மேம்பாட்டு வேலைகள் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டு உள்ளன. முதல் கட்டமாக 32 ஏக்கர் நிலத்தில் 50 இலட்சம் மதிப்புள்ள திட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க வேலைகள் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு ஏனைய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை எப்போது தொடங்கப்படும் ? எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஏக்கரில் தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற திட்டம் நடப்பு ஆண்டு இறுதிக்குள்ளாக முடிக்கப்பட்டு, தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும்.

உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*540—**திரு. ஆர். மூக்கன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உப்பிலியாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பார்வையில் உள்ளது.

(ஆ) இம் மதிப்பீடு குடிநீர் வடிகால் வாரிய அங்கீகாரம் பெற்று அரசின் அனுமதி பெறப்பட்ட பின், செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.